3768/15 975/- 80

Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 04

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஷூ ஆனி மீ 13 ஆம் உ புதன்கிழமை (27 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 3 ஓசை 129

## புலிகளுக்கு எதிரான போரில் அரசுக்கு பாகிஸ்தான் உதவுமென்கிறார் ராஜீவ்

(கௌகாச்சி)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்பொழுது தோன்றியுள்ள யுத்தத்தையடுத்து நிலமையை சமாளிக்க பாகிஸ்தான் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பக் கூடும். என்று முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். இந்தியாவுடன் நட்புறவுடன் இல்லாத பாகிஸ்தான் உட்பட சில நாடுகளின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது என்றும் அவர் சொன்னார். பாகிஸ்தான் இலங்கைக்கு தனது படையினரை அனுப்பாமல் பொருட்களை அனுப்பி உதவலாம் என்று பிரதமர் வி. பி. சிங் அண்மையில் தன்னிடம் கூறியதாகவும் ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார். இந்திய- (4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்நகரில் நேற்றுமுன் தினம் குண்டுவீச்சிற்கு இலக்கான சில வர்த்தக நிலையங்களும், குண்டு வீச்சால் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக தீயணைப்பு வாகனம் செல்வதையும் படத்தில் காணலாம்.

### நான்கு லட்சம் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர்

# வடக்கு - கிழக்குப் பிரதேச மக்கள் மீது அரசு பொருளாதாரத் தடையா?

## தம்பலகாமத்தில் 3 இராணுவம் பலி

(திருமலை)

பாலம் போட்ட ஆறு என்ற இடத்தில் இருந்து தம்பலகாமம் நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவத் தொடர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் 7 இராணுவம் காயம்

பலாலியில் வீதித் தடைகளை அகற்றும் வேலைகளில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்ததாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கைகள் தெரிவித்துள்ளது.

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

## புலிகள் தாக்கி இராணுவ அதிகாரி கோட்டைக்குள் காயம்!

(கொழும்பு)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலால் இராணுவ அதிகாரி ஒருவரும் மூன்று சிப்பாய்களும் காயம் அடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டை மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுவதால் காயமடைந்த இராணுவத்தினருக்கு சிகிச்சை (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களாக உணவு மருந்து எரிபொருள் எதுவும் வரவில்லை!

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் வடக்குக் கிழக்கில் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ள நான்கு லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நிவாரணப் பொருள்களையும் அனுப்பி வைக்கவில்லை.

பட்டினிபோடும்

இப்படி?

உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் ...

அங்கலாய்க்கின்றன.

பொதுப்...

## பொது மகன் பலி

(கோமாரி)

மட்டக்களப்பில் கோமாரி என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று தமிழ் மக்களை பிடித்துச் சென்றனர் இவ்வாறு பிடித்துச் சென்றவர்களைக் கொண்டு காஞ்சி குடா முகாமைத் துப்பரவு செய்யும் போது கண்ணி வெடி வெடித்து ஒரு பொதுமகன் பலியானார்.

## ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் முக்கியமான ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன. 1100 கட்டில் வசதிகள் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை மூடப்பட்ட நிலையில் உள்ளது. 340 கட்டில்களைக்

(திருமலை)

பாலம் போட்ட ஆறு என்ற இடத்தில் இருந்து தம்பலகாமம் நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவத் தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

## புலிகள் தாக்கி இராணுவ அதிகாரி கோட்டைக்குள் காயம்!

(கொழும்பு)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலால் இராணுவ அதிகாரி ஒருவரும் மூன்று சிப்பாய்களும் காயம் அடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டை மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுவதால் காயமடைந்த இராணுவத்தினருக்கு சிகிச்சை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் படகை மறித்து கடற்படையினர் காடைத்தனம்

(கொக்குளாய்)

கொக்குளாயில் படகில் சென்ற இருபத்தி ஐந்து அகதிகளின் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் கொக்குளாயில் இருந்து புதுக்குடியிருப்பு, தண்ணீர் ஊற்று, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு கடற்கரையோரமாக மெதுவாக சென்று கொண்டிருந்தனர். இவர்கள் சென்று கொண்டிருந்த படகைக்கண்ட கடற்படையினர், இவர்கள் அனைவரையும் தமது படகினில் ஏறச்சொல்லி ஏற்றிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ராணுவம்; நகருக்குள் மக்கள் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பிரவேசித்துள்ளார்கள். அம்பாறை, புலானை, மற்றும் மட்டக்களப்பு கடற் பகுதி ஆகிய பகுதிகளால் மட்டக்களப்பு நகரை நோக்கி ஸ்ரீலங்கா படையின் முப்படைகளும் சேர்ந்து தாக்குதல் நடத்திவந்தனர். இதனால் மட்டக்களப்பு நகரை விட்டு மக்கள் அனைவரும் அகதிகளாக வெளியேறிவிட்டனர்.

இராணுவத்தினர் நகரை அண்மிக்கும் வேளையில், நக

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் இன்மையால் அகதிகள் இடைநடுவில் அவதி

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

பூநகரியில் இருந்து கேரதீவிற்கு வரும் வாகனங்களை பாதையில் ஏற்றுவதற்கு பாதை செலுத்துவோர் ஒரு வாகனத்திற்கு மூன்று லீற்றர் பெற்றோல் வீதம் கேட்கின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடே இதற்குக் காரணம் இதனால் பெற்றோல் கொடுப்பவர்கள் மட்டுமே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு மா அனுப்பக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை துறை முகத்திற்கு கப்பலில் வந்த மாவை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இறக்க விடாததினால், மாக்கப்பல் கொழும்பு திரும்பிச் சென்றுள்ளது. இதனால் கொழும்பில் இருந்து தரை மார்க்கமாக மூன்று மாதத்திற்கு தேவையான மா அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறை முகத்திற்கு வந்தமாக்கப்பல் தரை இறங்க ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை இதனால் பல நாட்களாக துறை முகத்தில் மாக்கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களாக உணவு மருந்து எரிபொருள் எதுவும் வரவில்லை!

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் வடக்குக் கிழக்கில் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ள நான்கு லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நிவாரணப் பொருள்களையும் அனுப்பி வைக்கவில்லை.

### பட்டினிபோடும் திட்டமா?

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக அல்ல விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே போர் தொடுத்துள்ளதாக பிரகடனம் செய்த அரசு தற்போது கடந்த இரண்டு வாரங்களாக உணவுப் பொருள்கள், மருந்துப்பொருள்கள் முதற்கொண்டு எதுவித பொருள்களையும் வடக்குக் கிழக்குக்கு அனுப்பி வைக்காது மக்களை பட்டினி போட்டும் நோயினால் வதைத்தும் வருவதைக் கண்டு பொதுஸ்தாபனங்கள் அங்கலாய்க்கின்றன.

### பொய்ப் பிரச்சாரங்கள்

வட பகுதிக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் ஏற்றிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ஹெலிக்கு சிறுவன்உட்பட இருவர் பலி

(சுதுமலை)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான குண்டு வீச்சால் நேற்றிரவு கொக்குவிலில் இருவர் உயிரிழந்தார்கள். பலர்காயமடைந்தனர்.

கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள தென்னிந்திய திருச்சபை அருகிலுள்ள கோமர் என்பவரது வீட்டில் ஹெலியில் இருந்து நேற்றிரவு 7.45 மணியளவில் வீசப்பட்ட குண்டினால் இக்கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

இக்கோரச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் படுகாயம் அடைந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் விபரங்களை பொலிஸில் தெரிவிக்கவேண்டும்

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கள் பெயர் முகவரி மற்றும் அலுவல் ஆகிய விபரங்களை அருகாமையில் உள்ள காவல் நிலையங்களில் ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்கவேண்டும்.

அப்படித் தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு ஓர் அறிவிப்பு செய்துள்ளது.

அதே போன்று இலங்கைத் தமிழர்களுக்கு வீட்டை வாடகைக்கு கொடுத்தவர்களும், வீட்டு முகவரி குடியிருப்போர் எண்ணிக்கை பெயர், குடியிருந்தவர்களின் காலம் ஆகிய விபரங்களை அருகாமையில் உள்ள காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும். தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் அவ் அறிவிப்பு கூறுகிறது.

1983 ஆம் ஆண்டு முதல் தமிழகத்திற்கு இலங்கையில் இருந்து வந்து சட்டப்படியான ஆவணமின்றி இருக்கும் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் அளவில் நடந்து கொள்வதாலும் அவர்கள் தொடர்ந்து இந்தியாவில் இருந்து வருவதை முறைப்படுத்துவதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

### 46 தமிழர் எரிப்பு

(கல்முனை)

கல்முனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாற்பத்தியாறு தமிழரை ஜிகாத் இயக்கமும், சிறிலங்கா இராணுவமும் சேர்ந்து ரயர் போட்டுக் கொழுத்தியுள்ளனர்.

### யார் தலைக்குள் என்ன இருக்கிறது!

(புதுடில்லி)

இலங்கை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னாவின் தலைக்குள் என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை என இந்தியப் பிரதமர் வி.பி. சிங் ஏசியா வீக் என்ற சஞ்சிகைக்கு அளித்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொது மகன் பலி

(கோமாரி)

மட்டக்களப்பில் கோமாரி என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று தமிழ் மக்களை பிடித்துச் சென்றனர்இவ்வாறு பிடித்துச் சென்றவர்களைக் கொண்டு காஞ்சி குடா முகாமைத் துப்பரவு செய்யும் போது கண்ணி வெடி வெடித்து ஒரு பொதுமகன் பலியானார்.

## இவர்களுக்கும் ரூபா 1000

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல் பலாலி, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிலும் ஆசிரியர்களுக்கும் தலா ரூ 1000/- கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

## பஸ் திருப்பி அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவத்துக்கு உணவு வழங்க புலிகள் அனுமதித்தால் நீங்கள் கொழும்பு செல்ல நாம் அனுமதிப்போம்.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற தனியார் பஸ் ஒன்றை செட்டி குளத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் மறித்த ஸ்ரீலங்கா இராணுவம் கூறி திருப்பி அனுப்பியது.

## கொக்காவிலில் 2புலிகள் மரணம்

(கொக்காவில்)

கொக்காவிலில் நேற்று நண்பகல் இராணுவ முகாமில் போடப்பட்ட பொதிகள் பல வெளியில் வீழ்ந்தன. இப்பொதிகளை எடுக்க இராணுவம் வெளியில் வந்தபோது புலிகளால் தாக்குதல் மேற்கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

பலாலியில் வீதித் தடைகளை அகற்றும் வேலைகளில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்ததாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கைகள் தெரிவித்துள்ளது.

## ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் முக்கியமான ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன. 1100 கட்டில் வசதிகள் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை மூடப்பட்ட நிலையில் உள்ளது. 340 கட்டில்களைக் கொண்ட தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டு வைத்திய தேவைக்கான மாற்று ஒழுங்குகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடிநீர்ப் பிரச்சினை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நிர்வாக எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள அகதி முகாம்களில் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இது கடும் கோடையாதலால் அகதிகளுக்குப் போதிய நீர் முகாம்களுக்கு அருகில் உள்ள கிணறுகளில் இல்லையாம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஓரளவுவெற்றியாம்

(கொழும்பு)

விமானக்குண்டுவீச்சு தாக்குதல்களின் பின்னர் தான் போராளிகளின் முற்றுகையை ஓரளவு தகர்ப்பதில் ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று முன்தினம் வெற்றி பெற்றுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செய

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமவுரிமை கேட்கின்றனர்

(கண்டி)

இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு சகல சமூகத்தினரும் உழைத்ததால் இன்று அவர்கள் அனைவரும் சம உரிமையை கேட்கின்றனர்.

நாட்டில் ஐக்கியம் பேணப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து தொடர் மீது தாக்குதல்; 5இராணுவம்பலி

(வவுனியா)

வவுனியா மாமடுவிலிருந்து நேற்றுக் காலை நெடுங்குளம் பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள்வழிமறித்து தாக்கியதில் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் ஓடிவிட்டனர்.

இந்த தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பின்வருமாறு ரீ.56-2 ரகதுப்பாக்கி ஐந்து அதற்கான ரவைக்கூடு பத்தொன்பது, 7.62 ரகரவைகள் ஐநூற்று அறுபத்திமூன்று ஜே. ஆர். கிரனைட் நான்கு, துப்பாக்கி கிரனைட் 5 கோல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வருமாறு

# சகல முதலுதவிப் பிரிவுகளுக்கும் சென்ஜோன் ஆணையாளரழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் கல்வி, சுகாதாரக் கல்வி, ஆகியவற்றுடன் விஞ்ஞான அடிப்படையில் பயிற்சியை பெற்றுள்ள ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் தற்போதைய நிலைமைகளை கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமது முதலுதவி சிகிச்சையை மேற்கொள்ள முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்க வடபிராந்திய ஆணையாளரால் மகாஜனாகல்லூரி, யூனியன்கல்லூரி, நடேஸ்வரா கல்லூரி, இளவாலை கொன்வென்ற் ம. வி. கோப்பாய், பலாலி ஆசிரியர் கல்லூரிகள் உடுவில் மகளிர் கல்லூரி' இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி யாழ். இந்துமகளிர் கல்லூரி' சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். ஆங்கிலகொன்வென்ற், செஞ்சன்ஜோன் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, சாவகச்சேரி' டிரிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பளை மகா, வித்தியாலயம், சுன்னாகம் கிறிஸ்தவ திருச்சபை, பருத்தித்துறை, போரூட், சுகாதார தொண்டர்குழு, சிறுவர் பாடசாலை ஆசிரியர் குழு, அறவழிப் போராட்டக் குழு, சத்திய சாயிபாபா தொண்டர் குழு, வவுனியா கூட்டுறவு மகளிர் குழு, வவுனியா கிறிஸ்தவ இளைஞர் சங்கம் ஆகியவற்றின் சென்ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவுகளுக்கே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்த முதலுதவி சிகிச்சைப் பிரிவுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்தல், நோய்கள் வராது பாதுகாக்க உதவுதல், சுகாதார விதிகளை பின்பற்ற அறிவுரை வழங்கல் தொடர்ந்து நோய்கள் வராத வண்ணம் பாதுகாப்பு வழங்கல், உணவுப் பொருட்களை சேகரித்து வழங்குதல், பாதுகாப்பு முறைகளை அறியச் செய்தல் ஆகியவை சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## வருடாந்த பொங்கல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வீதி அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

பொங்கல் வைபவமும் ஸ்ரீ வீரபத்திரருக்கு விசேட அபிஷேக பூசை, ஆராதனைகளும் இடம் பெற்றன.

நாட்டில்அமைதியும்,சமாதானமும் நிலவ வேண்டுமென்று பிரார்த்தித்து ஆண், பெண்கள் உட்பட அநேக அடியார்கள் தீக்குளிப்புச் செய்தனர்.

ஆலயப் பூசகர் திரு. எஸ். தில்லைநாதன் உற்சவத்தை நடாத்தி வைத்தார். (24)

## பங்கீட்டுப் பொருட்கள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய பொருட்களான மா, சீனி, அரிசி என்பவற்றை மாத்திரமே பங்கீட்டு அடிப்படையில் பொது மக்களுக்கு தற்போது விநியோகித்து வருகின்றன. அந்தந்த பகுதியில் இருக்கும் ப. நோ. கூட்டுறவு சங்கங்கள் தங்கள் பகுதியில் இருக்கும் மக்களுக்கு பங்கீட்டு உணவுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (43)

## புதிய கிணறுகள் அமைக்கப்பட்டன

(கொழும்புத்துறை)

அராலிக் கிராமம் பெரிய குளத்தில் நான்கு புதிய கிணறுகள் அமைக்கப்படஉள்ளன. இதற்கான நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

இக் கிணறுகளின் மூலம் அநேக விவசாயிகள் பயனடைவார்கள் எனத் தெரிய வருகிறது. (24)

## தபால் சேவைகள் ஸ்தம்பிதம்

(கொழும்புத்துறை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள யுத்த நிலை காரணமாக வடக்குக் கிழக்கு தபால் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பித மடைந்துள்ளன. (24)

## வல்லையில் ஹெலியால் தொல்லை

(வல்வெட்டித்துறை)

வல்லை வெளியில் ஹெலி, பொம்மர், ஆவ்ரோ விமானங்கள் நடமாட்டத்தால் அவ்வழியால் செல்வோரும் வாகனங்களும் பெரும் கஷ்டமடைகின்றன.

மேற்படி விமானங்கள் நடமாடுவதுடன் துப்பாக்கிப் பிரயோகங்களும் செய்து வருகின்றன. நேற்று முன்தினமும், நேற்றும் செவ்வாய்க்கிழமையும் மேற்படி விமான நடமாட்டமும், துப்பாக்கிப் பிரயோகமும் இருந்ததால் போக்கு வரத்துக்கள் பெருமளவில் தடைப்பட்டன8. (6(

# கொழும்புத்துறை நோக்கி மக்கள் இடம்பெயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். கோட்டையிலிருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதல், பொம்மர் குண்டு வீச்சுக்களினால் பாதுகாப்புக் கருதி கொட்டடி, நாவாந்துறை, குருநகர், கரையூர் மக்கள் அகதிகளாகக் கொழும்புத்துறை கிழக்கு கிராமசேவையாளர் பகுதியில் 535குடும்பங்கள் தங்கியுள்ளனர்.

கொழும்புத்துறை கிழக்கு துரையப்பாவித்தியாலயத்தில் ... அகதி முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டார். அகதிகளாக இம் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களின் விபரங்களடங்கிய பட்டியல் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். எம். டொமினிகினால் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (24)

## கும்பாபிஷேகம் ...

## ரயில் விபத்தில் 20 பேர் பலி

(பீஹார்)

பீஹார்மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் இருபது பேர் கொல்லப்பட்டார்கள். ஐம்...

"இத்தாலியா 20"

# ஜாம்பவான்களை வெளியேற்றிய 2 ஆம் சுற்று: தொடரப் போகிறவர்கள் யார் யார்?

· நிர்மலன் ·

உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம் மிகவும் சுவாரஸ்யமான கட்டத்தை இப்போது அடைந்திருக்கிறது. முதல்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து இரண்டாம் சுற்று (ROUND OF 16) நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முதலாம் சுற்றில் எல்லாப் பிரிவுகளிலும் அணிகளை இலகுவாக தரப்படுத்தக் கூடிய முறையில் முடிவுகள் அமைந்தன. ஆனால் 'F' பிரிவு மட்டும் மிகவும் சிக்கலான பிரிவாக அமைந்தது. இப்பிரிவின் ஆறு ஆட்டங்களிலும் போடப்பட்ட மொத்த கோல்கள் ஆறு மட்டுமே. ஐந்து ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இங்கிலாந்தும் எகிப்தும் விளையாடிய ஒரேஒரு ஆட்டம் மட்டும் தீர்க்கமான முடிவைக் காட்டியது. இங்கிலாந்து இவ்வாட்டத்தில் 2 புள்ளிகளைப் பெற தோல்வியின் அடிப்படையில் எகிப்து நீக்கப்பட்டது. அடுத்து வரும் 2 ஆம் இடத்துக்கான தெரிவிற்கு அயர்லாந்து, ஒல்லாந்து இரண்டும் சமமான புள்ளிகளைப் பெற்ற நிலையில் போட்டியிடவே முதன் முறையாக லொத்தர் மூலம் 2 ஆம் 3ஆம் இடங்களை நிர்ணயிக்க வேண்டியதாயிற்று. இதனால் அயர்லாந்து 2 ஆம் இடத்தையும் ஒல்லாந்து 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

### இரண்டாம் சுற்று

இதனைத் தொடர்ந்து சகல பிரிவுகளிலும் இருந்து 16 அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன. ஆஸ்திரியா. ஐக்கிய அமெரிக்கா, சோவியத யூனியன் சுவீடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென் கொரியா, ஸ்கொட்லாந்து ஆகியவை போட்டியில் இருந்தும் நீக்கப்பட்டன.

### மீண்டும் கமரூன்

இரண்டாம் சுற்றில் தெரிவாகிய பதினாறு நாடுகளும் ஒவ்வொரு ஆட்டம் மட்டுமே ஆட இயலும் (KNOCK OUT) இதன் காரணமாக போட்டிகள் மிகவும் விறு விறுப்பானதாகவும் உக்கிரமானதாகவும் இயல்பாகவே அமைந்துவரும் ஆட்டங்கள் ஆரம்பமான போது கமரூன் கொலம்பியாவையும், செக்கோஸ்லோவாக்கியா கோஸ்டாரிக்காவையும் எதிர்த்தாடின. உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆரம்பத்திலேயே கமரூன்ஆர்ஜென்ரீனாவை அதிர்ச்சியுறவைத்தது. தொடர்ந்தும் சிறப்பாகச் செய்து இரண்டாம் சுற்றில் கொலம்பியாவைச் சந்தித்த போது பலரும் கமரூனைச் சந்தேகத்துடனேயே நோக்கினார்கள். ஏனெனில் 'D' பிரிவில் சொலம்பியா சிறப்பாகவே செய்திருந்தது. மேலும் அநுலத்தின் அமெரிக்கா அணி இருந்தும் கமரூன் வேறு விதமாக எண்ணிவிட்டது. முதல் 90 நிமிட நேரத்தில்இருபகுதிக்



கும் எதுவித கோலும் இன்றி போட்டி சரிசமனாகிய போது மேலதிக நேரமான 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. மேலதிக நேரத்தில் இரண்டவது பகுதியில் கமரூன வீரர் 38 வயதான றொஜா மியாக் 3 நிமிட இடைவெளியில் 2கோல்களை வெகு அற்புதமாகப் போட்டார். இருந்தும் கொலம்பியா மின்னல் வேகத்தில் ஆடி ஒரு கோல் போட்டது, ஆனால் போட்டி முடியும் போது கமரூன் 2-1 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை தோற்கடித்தது கால் இறுதி ஆட்டத்துக்கு ஒரு ஆபிரிக்க நாடு தகுதி பெறுவது இதுவே முதன் முறை. அரை இறுதி ஆட்டத் இறுதி ஆட்டத்துக்கும் அப்பால் சென்றிருக்க வேண்டியவை ஆனால் கமரூன் எகிப்து கோஸ்டாரிக்கா போன்ற நாடுகள் ஆரம்ப ஆட்டத்திலேயே முடிவுகளைத் திசை மாற்றி விட்டதால் இந்த நான்கு நாடுகளுமே ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ள வேண்டியேற்பட்டு விட்டது.

பிறேஸில் தன் ஆட்டங்கள் மூன்றிலும் வெற்றிகொண்ட நாடு. ஆர்ஜென்டீனா ஒரு தோல்வியைச் சந்தித்து தடை தாண்டி வந்த நாடு. இவை இரண்டும் மோதிக்கொள்ளும் நிலையில் பிரேசில் பக்கமே சாதகமான நிலை காணப்பட்டது. பிரேசில் அற்புதமாக ஆடி ஆர்ஜென்ரீனா ...

கோஸ்டாரிக்கா அணியை இலகுவாக 4-1 என்ற ரீதியில் தோற்கடித்தது. செக்கோஸ்லோவாக்கியா முதல் சுற்றில் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றது. மேலும் ஐக்கிய அமெரிக்க அணிக்கு ஐந்து கோல் போட்டு அதிரடி நடத்தியது. கோஸ்டாரிக்கா தன் பிரிவில் திறமையாகவே ஆடிய போதும் செக்கோஸ்லோவாக்கியாவின் வேகத்தின் முன் ஈடு கொடுக்க முடியாது பணிந்து விட்டது.

### மன்னர்கள் மோதல்

இரண்டாவது சுற்றின் 2ஆம் நாளில் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் உலக உதைபந்தாட்டச் சக்கரவர்த்திகள் 4 பேர் மோதிக்கொண்டார்கள். பிரேஸில் ஆர்ஜென்ரீனாவையும் ஒல்லாந்து மே. ஜேர்மனியையும் சந்தித்தன. இந்த நான்கு நாடுகளுமே கால்

இன்னொரு போட்டியில் ஐரோப்பிய சாம்பியன் ஒல்லாந்து மே. ஜேர்மனியிடம் 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்றுப் போயிற்று மே. ஜேர்மனி வெல்ல வேண்டிய அணியே என்றாலும் ஒல்லாந்து தோற்றிருக்கக்கூடாத அணி வன்பஸ்டன், நெய்காட், குலிட் போன்றவர்களைக் கொண்ட கவர்ச்சிகர விளையாட்டணி ஒல்லாந்து, வன்பஸ்டன் களத்தில் காயமடைந்தமை இவர்களைப் பலமிழக்கச் செய்து விட்டது எனலாம். இருப்பினும் மே. ஜேர்மனியின் கூட்டு விளையாட்டு அவர்களின் வெற்றிக்குக் காரணமென்பதை மறுக்க இயலாது.

திங்கள் நடைபெற்ற ஆட்டங்களில் இத்தாலி-உருகுவேயுடனும் அயர்லாந்து றோமானியாவுடனும் மோதிக்கொண்டன. இத்தாலியும் அயர்லாந்தும் வெற்றி கண்டன. இத்தாலி தரப்படுத்தலில் 1 ஆம் இடம் பெறும் நாடு இது வரையிலான போட்டிகளில் ஒன்றிலும் தோல்வி காணாத நாடு மேலும் தனக்கெதிராக இது வரை யாரையும் கோல் போட அனுமதிக்காத நாடு மிகப் பலம் வாய்ந்த இளையஅணி. இவர்களுடன் போட்டியிட்ட உருகுவே அதிவேக விளையாட்டு போக்கைக் கொண்டவர்கள்இருந்தும் துரதிஸ்டவசமாக இத்தாலியுடன் மோத வேண்டி வந்ததால் 2-0 என்ற ரீதியில் தோல்வி காண வேண்டி ஏற்பட்டு விட்டது.

அயர்லாந்துக்கும் றோமானியாவுக்கும் இடையிலான ஆட்டம் பெனால்டி முடிவு வரை (TIE BREAKER) சென்றது. மேலதிக 30 நிமிடத்திலும் கூட முடிவு காணாமையால் பெனால்டிகிக் மூலம் முடிவு காணப்பட்டது. அயர்லாந்து 5-4 என்றவகையில் றோமானியாவைத் தோற்கடித்தது. இரண்டுமே மிகச் சிறப்பான அணிகள் இருந்தும் பெனால்டிகிக் மூலம் ஒரு நாடு தோல்வியுறுவது பெரும் அவலமாகும்.

இறுதியாக முடிவுற வேண்டியிருந்த ஸ்பானியா யூகோஸ்லாவிய ஆட்டமும் இங்கிலாந்து, பெல்ஜியம் ஆட்டமும் முடிவடைந்திருக்கும். தொடர்ந்து 3ஆம் கட்டமான கால் இறுதி ஆட்டங்கள் 30

றது. (24)

துள்ளன. (24)

# கொழும்புத்துறை நோக்கி மக்கள் இடம்பெயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். கோட்டையிலிருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதல், பொம்மர் குண்டு வீச்சுக்களினால் பாதுகாப்புக் கருதி கொட்டடி, நாவாந்துறை, குருநகர், கரையூர் மக்கள் அகதிகளாகக் கொழும்புத்துறை கிழக்கு கிராமசேவையாளர் பகுதியில் 535குடும்பங்கள் தங்கியுள்ளனர்.

கொழும்புத்துறை கிழக்கு துரையப்பாவித்தியாலயத்தில் 56 குடும்பங்களும், கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தில் 400 குடும்பங்களும், கொழும்புத்துறை சந்தான மாதா தேவாலயத்தில் 79 குடும்பங்களும் அகதிகளாகத் தங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இவ் அகதி முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டார். அகதிகளாக இம் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களின் விபரங்களடங்கிய பட்டியல் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். எம். டொமினிகினால் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (24)

## கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

(வசாவிளான்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று ஆரம்பமாகவிருந்த மகா கும்பாபிஷேகம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தேவஸ்தான பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு வருவதற்கு

# உல்லாசப் பயணிகள், பத்திரிகையாளருக்கு தடை!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு மறு அறிவித்தல்வரை உல்லாசப் பயணிகள் செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களும் தகுந்த காரணம் காட்டி அனுமதிப் பத்திரத்துடன் தான் இப்பிரதேசங்களுக்குச் செல்ல முடியும் என்றும் அறிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை வெளிவிவகார அமைச்சின் பிரசாரப் பிரிவு பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.


## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள்

யாழ். ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தற்காலிகமாக இயங்குவதற்கு கோண்டாவிலில் பின்வரும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**திரு. சு. ஞானசுந்தரம்**
முத்தட்டுமட ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி,
**கோண்டாவில்.**

சுகாதார சேவைகள் பணிமனையில் கடமை புரியும் சகல உத்தியோகத்தவர்களும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B. 1196)

26-6-90


...வெளியில்

## தொல்லை

(வல்வெட்டித்துறை)

வல்லை வெளியில் ஹெலி, பொம்மர், ஆவ்ரோ விமானங்கள் நடமாட்டத்தால் அவ்வழியால் செல்வோரும் வாகனங்களும் பெரும் கஷ்டமடைகின்றன.

மேற்படி விமானங்கள் நடமாடுவதுடன் துப்பாக்கிப் பிரயோகங்களும் செய்து வருகின்றன. நேற்று முன்தினமும், நேற்றும் செவ்வாய்க்கிழமையும் மேற்படி விமான நடமாட்டமும், துப்பாக்கிப் பிரயோகமும் இருந்ததால் போக்கு வரத்துக்கள் பெருமளவில் தடைப்பட்டன8. (6(

## திறப்புக்கோர்வை உங்களுடையதா?

யாழ். நல்லூர் பின் வீதியில் மூன்று திறப்புக் கோர்வைகள் பிரதாப் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

...தாயா. ஐக்கிய அமெரிக்கா, சோவியத யூனியன் சுவீடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென் கொரியா, ஸ்கொட்லாந்து ஆகியவை போட்டியில் இருந்தும் நீக்கப்பட்டன.

**மீண்டும் கமரூன்**

இரண்டாம் சுற்றில் தெரிவாகிய பதினாறு நாடுகளும் ஒவ்வொரு ஆட்டம் மட்டுமே ஆட இயலும் (KNOCK OUT)

## ரயில் விபத்தில் 20 பேர் பலி

(பீஹார்)

பீஹார்மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் இருபது பேர் கொல்லப்பட்டார்கள். ஐம்பதுக்குமேற்பட்டோர் கடுமையான காயமடைந்துள்ளார்கள்.

பயணிகள் ரயில் வண்டியின் பின் பகுதியை சரக்கு ரயில் ஒன்று மோதியதையடுத்தே இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஐந்துபெட்டிகள் தடம் புரண்டுவிட்டதாகவும் மேலும் பல பயணிகள் இறந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கும் எதுவித கோலும் இன்றி போட்டி சரிசமனாகிய போது மேலதிக நேரமான 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. மேலதிக நேரத்தில் இரண்டவது பகுதியில் கமரூன் வீரர் 38 வயதான றொஜா மியாக் 3 நிமிட இடைவெளியில் 2 கோல்களை வெகு அற்புதமாகப் போட்டார். இருந்தும் கொலம்பியா மின்னல் வேகத்தில் ஆடி ஒரு கோல் போட்டது, ஆனால் போட்டி முடியும் போது கமரூன் 2-1 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை தோற்கடித்தது கால் இறுதி ஆட்டத்துக்கு ஒரு ஆபிரிக்க நாடு தகுதி பெறுவது இதுவே முதன் முறை. அரை இறுதி ஆட்டத்தில் கமரூன் இங்கிலாந்து அல்லது பெல்ஜியத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். செக்கோஸ்லோவாக்கியோ அணி

இறுதி ஆட்டத்துக்கும் அப்பால் சென்றிருக்க வேண்டியவை ஆனால் கமரூன் எகிப்து கோஸ்டாரிக்கா போன்ற நாடுகள் ஆரம்ப ஆட்டத்திலேயே முடிவுகளைத் திசை மாற்றி விட்டதால் இந்த நான்கு நாடுகளுமே ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ள வேண்டியேற்பட்டு விட்டது.

பிறேஸில் தன் ஆட்டங்கள் மூன்றிலும் வெற்றிகொண்ட நாடு. ஆர்ஜென்டீனா ஒரு தோல்வியைச் சந்தித்து தடை தாண்டி வந்த நாடு. இவை இரண்டும் மோதிக்கொள்ளும் நிலையில் பிரேசில் பக்கமே சாதகமான நிலை காணப்பட்டது. பிரேசில் அற்புதமாக ஆடி ஆர்ஜென்ரீனா கோல்போஸ்ட்டை 3முறை திறமையாகத் தாக்கினார்கள் குங்கா, கரீக்கா, முலர் மூவரும் கோல் போட முயன்ற போதும் அணுவளவில் சந்தர்ப்பங்கள் தப்பிவிட்டன.

இதன் பின்பும் ஆட்டத்தின் போக்கைக் கூடுதலாக பிரேசிலே நிர்ணயித்துக் கொண்டிருந்தது. ஆனால் போட்டிமுடிவடைய 10 நிமிடங்கள் இருக்கும் போது மரடோனா லாபமாகத் தட்டிக்கொடுத்த பந்தொன்றை கனீஜியா அற்புதமான கோலாக மாற்றினார். இருந்தும் அடுத்த சில நிமிடங்களில் முல்லருக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பமொன்றைப் பயன் படுத்தியிருந்தால் ஆட்டத்தின் போக்கு மாறியிருக்கக் கூடும். ஆனால் முல்லர் சந்தர்ப்பத்தைத் தவற விடுகிறார். தோற்க முடியாத பிரேஸில் 1-0 என்ற கோல் வித்தியாசத்தால் ஆர்ஜென்டீனாவிடம் தோற்று உலகக் கிண்ணப் போட்டியில் இருந்து தள்ளப்பட்டுப் போயிற்று. இதனை பிரேஸில் ரசிகர்கள் கண்ணீர் விட்டழுது ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று

...ஆட்டம் பெனால்டி முடிவு வரை (TIE BREAKER) சென்றது. மேலதிக 30 நிமிடத்திலும் கூட முடிவு காணாமையால் பெனால்டிகிக் மூலம் முடிவு காணப்பட்டது. அயர்லாந்து 5-4 என்றவகையில் றோமானியாவைத் தோற்கடித்தது. இரண்டுமே மிகச் சிறப்பான அணிகள் இருந்தும் பெனால்டிகிக் மூலம் ஒரு நாடு தோல்வியுறுவது பெரும் அவலமாகும்.

இறுதியாக முடிவுற வேண்டியிருந்த ஸ்பானியா யூகோஸ்லாவிய ஆட்டமும் இங்கிலாந்து, பெல்ஜியம் ஆட்டமும் முடிவடைந்திருக்கும். தொடர்ந்து 3 ஆம் கட்டமான கால் இறுதி ஆட்டங்கள் 30 ஆம் திகதி ஆரம்பிக்கும். சுற்றுப் போட்டி இன்னமும் வேகம் கொள்ளும். இருந்தாலும் பிரேசில், ஒல்லாந்து, றோமானியா போன்றவை நீக்கப்பட்டது உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு ஒரு நெருடலாகவே இருக்கும்.

## அகதிமுகாம் செல்வதற்காக உண்ணா விரதம்!

(சென்னை)

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்த ஈ பி. ஆர். எல். எவ். ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், உறுப்பினர்கள் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

இவர்கள் சிகிச்சைக்காக சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தம்மை விடுதலை செய்யும் படியும், விடுதலை செய்து இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாம்களுக்கு அனுப்பும்படியும் கோரி தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண். வடமேற்கு நொச்சியம்பதி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் ஜூன் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நடைபெறும்.

# உள்ளூராட்சி ஊழியர்களின் சம்பளம் கிடைக்கும்

(கொழும்புத்துறை)

தற்போதைய நிலைமைகளின் நிமித்தம் இடம்பெயர்ந்துள்ள உள்ளூராட்சி திணைக்கள, உள்ளூராட்சி சேவைகள் ஊழியர்களுக்கு அவர்களது மாதாந்த சம்பளத்தில் இம்மாதம் 75 வீதம் வழங்கப் படவுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தெரிவித்துள்ளார்.

தமது நாளாந்த வரவு கையெப்பத்தை உள்ளூராட்சி மன்றப் பொறுப்பு உத்தியோகத்தரிடம் இடுவதுடன் தமது இந்த சம்பளத்தையும் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனம், சமாஜம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் அங்கத்தவர்கள் அனைவரையும் 28ஆம் திகதி காலை பத்து மணிக்கு தம்மைச் சந்திக்குமாறு திரு. டிவகலாலா கேட்டுள்ளார். (24)

# வல்வையில் கடற்படைப் படகு பீரங்கித் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

வல்வை மக்களின் குடியிருப்புக்களை நோக்கி இலங்கைக் கடற்படையினர் திடீர்திடீரெனதாக்குதல்களைநடாத்தி வருகின்றார்கள்.

கடந்த வாரம் இரு தடவைகள் வல்வைமக்களின் குடியிருப்புக்களை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் பல மக்கள் படுகாயமுற்றதும், வீடுகள் பல சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் (25.6.90) திங்கள் காலை 8.30 மணியளவில் வல்வைக்கடலில் ரோந்து புரிந்த கடற்படையினர் திடீரென மக்கள் குடியிருப்புக்களை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலினால் வல்வை முன்னாள் பிரஜைகள் குழுத் தலைவர் திரு.எஸ். செல்வேந்திராவின் வீடு உட்பட பலரின் வீடுகள், உடைமைகள் சேதமாயின.

மேலும் ஒரு பெண்மணியின் தலையில் பாரிய காயம் ஏற்பட்டுமந்திகைவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர்களின் தாக்குதலால் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் அகதிகளாகி உள்ளனர். (68)

## இத்தாலி அயர்லாந்து வெற்றி

திங்களன்று நடைபெற்ற உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட 2ஆம் சுற்றுப்போட்டிகளில் இத்தாலி 2-1 என்ற ரீதியில் உருகுவே அணியைத் தோற்கடித்தது. இன்னொரு போட்டியில் அயர்லாந்து றோமானியாவை பெனால்டிகிக் மூலம் 5-4 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. கால் இறுதிப்போட்டிக்கு இத்தாலியும் அயர்லாந்தும் தகுதிபெற உருகுவே றோமானியா இரண்டும் போட்டியில் இருந்து நீக்கப் படுகின்றன.

கால் இறுதி ஆட்டங்கள் ஜூன் 30ஆம் திகதி ஆரம்பிக்கின்றன.


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கென அறிவிக்கப் பட்டிருந்த முடிவுத் திகதி (27-6-1990) இப்பொழுது 6-07-1990 வெள்ளிக்கிழமை (முற்பகல் 11-00 மணிக்கு ) என மாற்றப்பட்டுள்ளது.

--பதிவாளர்

26. 06. 1990

(B/1199)

## சிந்தனைக்கு

பாமர மக்களின் அனுதாபத்தைப் பெறவிரும்பினால், மிகக் கொச்சையான, மடமையான விஷயங்களை அவர்களுக்கு நீ சொல்ல வேண்டும்.

— அதால்ஃப் ஹிட்லர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# தர்மம் பேசும் ஹிட்லரிசம்

தமிழ்க் கிராமங்களோடு இணைந்த எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களவர்களின் தற்பாதுகாப்புக்கு சிறிலங்கா சிங்கள பௌத்த அரசு துப்பாக்கி வழங்கியிருக்கிறது.

இச்செய்தி உண்மைதான் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இது ஒன்றும் புதியதிட்டமோ நடவடிக்கையோ அல்ல. தர்மிஷ்டர் ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் அரசில் தேசியபந்தோபஸ்து அமைச்சராக லலித்அத்துலத்முதலி இருந்தபோதே இதுபோன்ற திட்டம் வகுக்கப்பட்டது; சிலபகுதிகளில் அமுலாக்கப்பட்டதுமுண்டு.

திருக்கோணமலைப் பகுதிகளில் சிறை சென்ற கடும் குற்றவாளிகளைக் குடியேற்றி அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்போவதாக அத்துலத்முதலி அன்று கூறியிருந்தார்.

வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை ஓய்வுபெற்ற பட்டாளத்தினரைக் குடியமர்த்தி ஆயுதங்கள் கொடுக்கப் போவதாகவும் அன்றைய தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலி தெரிவித்திருந்தார்.

இன்று பிரேமதாசா அமைச்சரவையில் கல்வி உயர்கல்விஅமைச்சராக இருக்கும் லலித்அத்துலத்முதலி நாளாந்தக்கல்லூரி வைபவமொன்றில் உரையாற்றுகையில் வடக்கு கிழக்கில் தீவிரவாதத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கில் இப்போது தீவிரவாதத்தை முறியடிக்க அனைவரும் ஒன்று திரண்டு போராட முன்வர வேண்டுமென்றும் அமைச்சர் அத்துலத்முதலி (சிங்களவர்களுக்கு) அழைப்பு விடுத்திருக்கிறார்.

எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்களுக்குத்தான் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்களை சிறிலங்கா சிங்கள அரசு வழங்கியிருக்கிறது என்று நம்ப முடியுமா?

கிழக்கில் தமிழ் மண்ணை அபகரிப்பதற்காக திட்டமிட்டுத் திருக்கோணமலை, அம்பாறை, இங்கினியாகல, புனானை, வாழைச்சேனை, வெலிஓயா போன்ற இடங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு ஆயுதங்களை சிறிலங்கா சிங்கள பௌத்த அரசாங்கம் வழங்கியிருக்கவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?

முல்லைத்தீவு முதல் மட்டக்களப்பு வரை கடலோரப் பகுதியில் வாடியடித்து மீன்பிடிக்க வந்து

# ஆக்கிரமிப்பு யுத்தத்தை விடுதலை போரினால் எதிர் கொள்வோம்

(நேற்றைய தொடர்ச்சி)

அடுத்த விடயம் வடக்கு, கிழக்கு இணைப்பு சம்பந்தமானதாகும். இந்த இணைவுக்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்பது இந்தியா -ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின் ஷரத்துக்களில் ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தையே முழுமையாக நிராகரிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் பல தடவைகள் பகிரங்கமாக அறிவித்த பின்பும் சர்வஜன வாக்கெடுப்பு என்ற கத்தியைக்காட்டி அரசாங்கம் தெருச்சண்டித்தனப்பாணியில் நடந்து கொள்வது எதற்காக? தற்போதைய யுத்தத்திற்கு ஒரு சில நாட்கள் முன்பாகத்தான் சர்வஜன வாக்கெடுப்பு மீண்டும் 6 மாதத்திற்கு ஒத்திப் போடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

மூன்றாவது விடயம் மாகாணசபையை அமைப்பதற்கான தேர்தல் நடத்தப்படவேண்டுமென்பதாகும். தற்போதைய மாகாணசபை ஆட்சியானது ஒரு கைப்பொம்மை ஆட்சியென்பதும் அது இன்று செயற்படுத்துவதற்கான எந்த அரசியல் ஆதாரமும் இல்லாதிருப்பதையும் யாவரும் அறிவர். அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இன்று தமிழீழத்தில் ஆட்சியை நடத்துகிறார்கள் என்பதுவும் சகலராலும் அறியப்பட்டதும் ஒத்துக் கொள்ளப்பட்டதுமான ஓர் உண்மையாகும். நடைமுறையில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உண்மை யாப்புரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படல் அவசியம்தானே. அப்போதுதானே முடி இலங்கையின் ஜனநாயக நீரோட்டத்தில் உரிமையுடன் கலந்து கொண்டதாக இருக்கும் இது விடயமாகவும் சிறிலங்கா அரசு எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. காலங்கடத்தியே வந்தது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்ததாக அறிவித்தது. ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் முன்பாக யுத்தத்தை ஆரம்பித்துள்ளதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். யுத்தத்தைத்திணித்த பின்பு தான் அரசுதேர்தலைநடத்தவிரும்புகின்றதா?

நான்காவது விடயம் ஐக்கிய இலங்கையுள் சுமுகமானமுறையிலான தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக கூறும் அதேவேளையில் மலையக மக்களின் ஒரு பகுதியினரை சட்ட காரணங்கள் காட்டி நாடுகடத்துவதற்கான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையாகும்.

சிறிலங்காஅரசாங்கம் இலங்கையின் அனைத்துப்பிரிவு மக்களுக்கும் நம்பிக்கைத்துரோகம் செய்து வருகின்றது. அதனது துரோகத்தின் உச்சகட்டமும் துரோகத்தின் தவிர்க்க முடியாத விளைபொருளுமே அது தொடுத்துள்ள தற்போதைய ஆக்கிரமிபபு யுத்தமாகும்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வை அடைவதற்கான முயற்சி வெற்றிபெற வேண்டுமானால், அவ்வித பேச்சுவார்த்தையை நடத்திச் செல்வதற்கான ஒருசுமுகமான இராணுவ சூழல் அல்லது பதட்டமோ மனப்பயமோ அற்ற ஒரு இராணுவ சமநிலை இருக்கவேண்டியது அவசியம் என்பது அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடியதொன்றேயாகும். ஆனால் இந்த வெளிப்படையான உண்மையை சிறிலங்கா அரசாலும், யு.என்.பியாலும் புரிந்து கொள்ள முடியாது போனமை தமிழ், முஸ்லிம் மக்களின் துர் அதிர்ஸ்டமேயாகும்.

அது எவ்விதம் என்பதை நோக்குவோம்.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்போடு இணைந்துள்ளது என்பதை அரசாங்கமே பலதடவைகளில் ஒத்துக் கொண்டுள்ளது. இவ் உரிமைக்

### மகாலிங்கம்

குக் குந்தகம் விளைவிக்கும் செயல்கள் அனைத்தும் சுமுகமான இராணுவ சூழலுக்கு எதிரானதாகும். எதிர்க்கட்சிகளும், 'தேசிய' பத்திரிகைகளும் (வீரகேசரி தவிர்ந்த) பௌத்த மதபீடங்களும் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கெதிராக சுதந்திரமாக இயக்கம நடத்தி வருகிறார்கள். தனி அரசு கோருவதை 6 ஆவது சட்டதிருத்தத்தின்மூலம் சட்டவிரோதமாக்கிய அரசாங்கம் இதுவிடயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருந்தது எதற்காக? திரைமறைவில் அரசாங்கமே இவ்வித பிரச்சாரத்தை ஊக்குவித்தது எதற்காக? இராணுவ பதட்ட நிலைதோன்றக் காரணமாய் இருந்தது யார்?

அடுத்த விடயம், ஏற்கனவே அமையப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் பற்றி பேசியே தீர்த்துக் கொள்வோம் என்பது இருசாராரும் ஒத்துக் கொண்ட விடயங்களாகும். அதேபோல் அதுவரை புதிய குடியேற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதுவும் இருசாராரும் ஒத்துக் கொண்ட விடயமாகும். ஆனால் அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்தியதா? இல்லை. ஆட்சேபனைகளின் மத்தியிலும் குடியேற்றங்கள் நடந்து கொண்டே இருந்தன. நேரடியாக கூட்டிச் சென்று காட்டப்பட்டுங்கூட அவை நிறுத்தப்படவேயில்லை.

மூன்றாவது விடயம், இராணுவ சமநிலையுடன் தொடர்புபட்ட இராணுவ துருப்புக்கள் சம்பந்தப்பட்ட விவகாரமுமாகும்.

வடகிழக்கு மாகாணம் ஸ்ரீலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளான மாகாணங்களாக கருதப்படக்கூடாது என்பதாகும். இவற்றின் அடிப்படையில், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான இராணுவ முகாம்களும் அதில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான சிப்பாய்களும் இருக்கவேண்டும் என்பதுவும் முன்வைக்கப்பட்டன. அவை கவனத்தில் எடுக்கப்படும் என்று உறுதியும் வழங்கப்பட்டன. ஆனால் நடைபெற்றது என்ன? முகாம்கள் மூடப்படவில்லை, புதிதான முகாம்கள் அமைக்கவும் திட்டங்கள் இருந்தன. சிப்பாய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டன.

நான்காவது விடயம் ஸ்ரீலங்கா இராணுவ துருப்புக்களின் நடமாட்டம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். இது பல இடங்களில் மீறப்பட்டன. இதன் விளைவால் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிற்சில ஆயுத மோதல்களும் இடம் பெற்றன.

ஐந்தாவது விடயம், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ், முஸ்லிம் பொலிஸாரே சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். என்ற கோரிக்கையாகும். இது மிகச் சரியான கோரிக்கையேயாகும் என்பதை அரசாங்கமும் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டும் அதுசெவிடன்காதில் ஊதியசங்குபோன்றானது. பொலிஸ் நிலையங்களில் சிங்கள பொலிஸாரின் செல்வாக்கே அதிகமாகவும் இருந்தது. அவர்களேஅதிகார ரீதியில் கையோங்கியவர்களாக இருந்தார்கள்.

அரசியல் முறையிலும், இராணுவத்துறையிலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இன சமத்துவமுள்ள ஒரு ஐக்கிய இலங்கையை முற்றாக விரும்பவில்லை என்பதை தெளிவாகக் காட்டுகிறதல்லவா? இந்த விருப்பமின்மையுடனேயே அவர்கள் 'சமாதானப் பேச்சுவார்த்தைக்கு' வந்தார்கள், பேச்சுவார்த்தையை முறிப்பதற்கும், இன ஒடுக்குமுறையுடன் கூடிய ஒரு 'ஐக்கிய இலங்கையை' உருவாக்கும் அவர்களின் ஆசையை நிறைவேற்றவும் ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் எதுவுமே இல்லை.

எமக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை விடுதலை யுத்தத்தால் எதிர்ப்பதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமே இல்லை.

(முற்றும்)

### தெஹ்ரானில் தரையிறங்கிய

# அமெரிக்க மீட்புப் பணிக் குழு வந்த விமானத்திலேயே திருப்பப்பட்டது

(தெஹ்ரான்)

ஈரானில் இடம் பெற்றுள்ள அழிவுகளைத் தொடர்ந்து

சுமார் 90 நிமிடங்கள் தெஹ்ரான் விமான நிலையத்தில் மேற்படி விமானம்

#### பிரிட்டன் நிவாரண உதவிகள்

பிரிட்டனும் ஏராளமான நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் தெஹ்ரா

டுள்ளது.

ஒரு விமானத்தில் இவை தெஹிரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. லண்டன் விமான நிலையத்தில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர் கலந்து கொண்டார்.

பிரிட்டன் ஈரான் உறவு நிலை எப்படியிருந்தாலும் உதவி தேவைப் படும்போது தன்னாலான உதவிகளை பிரிட்டன் எப்போதும் செய்யத் தயார் என்று அவர் அங்கு உரையாற்றினார்.

இந்த உதவிகளை ஈரான் பெருமனதுடன் ஏற்றுக் கொள்ளும் எனத்தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்

முன்னரே முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கில் இப்போது தீவிரவாதத்தை முறியடிக்க அனைவரும் ஒன்று திரண்டு போராட முன்வர வேண்டுமென்றும் அமைச்சர் அத்துலத்முதலி (சிங்களவர்களுக்கு) அழைப்பு விடுத்திருக்கிறார்.

எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்களுக்குத்தான் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்களை சிறிலங்கா சிங்கள அரசு வழங்கியிருக்கிறது என்று நம்ப முடியுமா?

கிழக்கில் தமிழ் மண்ணை அபகரிப்பதற்காக திட்டமிட்டுத் திருக்கோணமலை, அம்பாறை, இங்கினியாகல, புனானை, வாழைச்சேனை, வெலிஓயா போன்ற இடங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு ஆயுதங்களை சிறிலங்கா சிங்கள பௌத்த அரசாங்கம் வழங்கியிருக்கவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?

முல்லைத்தீவு முதல் மட்டக்களப்பு வரை கடலோரப் பகுதியில் வாடியடித்து மீன்பிடிக்க வந்து தமிழ் மண்ணை அபகரித்துக்கொண்ட மீனவர்களுக்கும் ஆயுதங்கள் கொடுக்கவில்லை என்பது என்ன நிச்சயம்?

கிழக்கில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் பாதுகாப்புக்காகவே அங்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சிங்களக் குடியேற்றப் பகுதி ஒவ்வொன்றிலும் முழுக்க முழுக்க சிங்களப் பொலிஸ்காரர்களைக்கொண்ட பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்கும் மேலாக சிங்களவர்களுக்கு சிறிலங்கா சிங்கள அரசாங்கம் ஆயுதங்கள் வழங்கியிருக்கிறது என்றால் அதன் அர்த்தம் என்ன; நோக்கம் என்ன?

சிங்களப் பகுதிகளில் ஜே. வி. பி. என்ற தீவிரவாத இயக்கம் ஆயுதமுனையில் அட்டகாசம் புரிந்தபோதுகூட சிங்களக் கிராம வாசிகளுக்கு ஆயுதங்கள் கொடுக்கப்படவில்லையே!

ஜே. வி. பி. யினர் ஆயுதங்களுடன் சிங்கராஜாக் காடுகளில் மறைந்திருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்தும் காடுகளில்கூட அவர்களை அழிப்பதற்காக விமானத்திலிருந்து குண்டு வீசுவதற்கு சிறிலங்கா சிங்கள அரசு முன்வரவில்லை.

ஆனால் தமிழ்த் தீவிரவாதிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ்மக்கள் நெருக்கமாக வாழும் வடக்கு கிழக்கு நகரங்களில் விமானத்திலிருந்து பயங்கரமாகக் குண்டுகள் வீசப்படுகின்றன; ஹெலியிலிருந்துதுப்பாக்கிச்சூடு மட்டுமல்ல எறிகுண்டுகளும் வீசப்படுகின்றன. இராணுவ முகாம்களிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளுக்கு கண்மூடித்தனமாக ஷெல் அடிக்கப்படுகின்றன. கடற்கரையிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளுக்கு கடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்கின்றன.

இத்தனையும் போதாதென்று சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் கொடுப்பதென்றால் சிறிலங்கா சிங்கள பௌத்த அரசு அப்பட்டமான இனப்படுகொலையைச் செய்கிறதென்பதில் என்ன சந்தேகம்?

இன ஒற்றுமையும் தேசிய ஒருமைப்பாடும் தர்மமும் பேசிப்பேசி ஹிட்லரைவிட மிக மோசமாக இன ஒழிப்பில் ஈடுபடும் சிறிலங்கா சிங்கள பௌத்த இனவாத அரசின் சுய உருவத்தை உலக நாடுகளில் தோலுரித்துக்காட்ட வேண்டியது மிக மிக அவசியம்.

சாம் தம்பிமுத்துவின் கொலையைத் தொடர்ந்து தமிழ் எம். பிக்களின் பாதுகாப்பு குறித்து ஓலமிட்ட சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள பௌத்த பேரினவாதப் பத்திரிகைகளும் ஈரோஸ் ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பிக்களின் தற்பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களைப் பறித்ததையும், மெய்ப் பாதுகாவலாளர்களை விலக்கிக்கொண்டதையும் பற்றி ஒரு வார்த்தைகூட வாய் திறக்காமலிருப்பது ஏன்?

---

வும் ஏற்றுக் கொள்ளப்படல் இராணுவ சூழல் அல்லது பது இருசாராரும் ஒத்துக் களில் மீறப்பட்டன. இதன்

(முற்றும்)

---

## தெஹ்ரானில் தரையிறங்கிய

# அமெரிக்க மீட்புப் பணிக் குழு வந்த விமானத்திலேயே திருப்பப்பட்டது

(தெஹ்ரான்)

ஈரானில் இடம் பெற்றுள்ள அழிவுகளைத் தொடர்ந்து அங்கு மீட்பு வேலைகளை மேற்கொள்ளும் வகையில் அமெரிக்காவிலிருந்து வந்த மீட்புப் பணி ஊழியர்கள் வந்த அதே விமானத்திலேயே ஈரானிய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

தமது பகைமை நாடுகளாயினும் அவைகள் அளிக்கும் நிவாரணங்களை தாம் நிராகரிக்கப் போவதில்லை என்று ஈரான் அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இயங்கும் பொது ஸ்தாபனம் ஒன்று மருந்தும் வேறு பல வகையான உதவிப் பொருட்களுடன் மீட்புப் பணி ஆட்களையும் விமானம் மூலம் அனுப்பி வைத்திருந்தது.

தனியாருக்கு சொந்தமான இந்த விமானம் தெஹ்ரான் விமான நிலையத்தில் தரையிறங்கியதும் ஈரானிய அதிகாரிகள் தமக்கு உதவிப் பொருட்கள் மாத்திரமே அவசியமென்று கூறியதுடன் மீட்புப் பணி ஊழியர்கள் வேண்டாமென்றும் கூறிவிட்டனர்.

சுமார் 90 நிமிடங்கள் தெஹ்ரான் விமான நிலையத்தில் மேற்படி விமானம் தரித்து நின்றதுடன் உதவிப் பொருட்கள் யாவும் இறக்கப்பட்டதின் பின்பு அதே விமானத்தில் அமெரிக்க மீட்புப் பணி ஊழியர்கள் அனைவரும் திரும்பி விட்டதாக கூறப்பட்டது. நீண்டகால இடைவெளிக்குப் பின்பு ஈரான் விமான நிலையத்தில் தரையிறங்கிய முதலாவது விமானம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமான அடிப்படையிலான அனைத்து உதவிகளையும் வெளிநாடுகளிலிருந்து ஏற்றுக் கொள்வதென ஈரான் சிலதினங்களுக்கு முன்பு அறிவித்திருந்தது. அரசின் இந்த அறிவிப்பை ஈரானிய முஸ்லிம் மதக் கோட்பாட்டாளர்கள் ஏற்றுக் கொள்ளாமையே அமெரிக்க மீட்புப் பணி ஊழியர்கள் திருப்பி அனுப்பப்பட்டமைக்கான காரணமென்று அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

**பிரிட்டன் நிவாரண உதவிகள்**

இதேவேளை ஈரானின் மற்றொரு பகைமை நாடான பிரிட்டனும் ஏராளமான நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் தெஹ்ரானுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விமானத்தில் இவை தெஹ்ரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. லண்டன் விமான நிலையத்தில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர் கலந்து கொண்டார்.

பிரிட்டன் ஈரான் உறவு நிலை எப்படியிருந்தாலும் உதவி தேவைப்படும்போது தன்னாலான உதவிகளை பிரிட்டன் எப்போதும் செய்யத் தயார் என்று அவர் அங்கு உரையாற்றினார்.

இந்த உதவிகளை ஈரான் பெருமனதுடன் ஏற்றுக் கொள்ளும் எனத்தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# லைபீரியாவில் வசிக்கும் இந்திய பிரஜைகளை வெளியேற வேண்டுகோள்

(டில்லி)

லைபீரியாவில் வசிக்கும் இந்திய பிரஜைகள் அனைவரையும் பாதுகாப்பாக அங்கிருந்து வெளியேறுமாறு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

லைபீரிய அரச படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான யுத்தம் நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது. இந்த யுத்தம் தற்பொழுது வலுவடைந்துள்ளதை அடுத்தே அங்கு வசித்து வரும் தமது நாட்டு மக்களை பாதுகாக்கும் வகையில் இந்தியா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஏறக்குறைய 3500 இந்திய மக்கள் லைபீரியாவில் உள்ளார்கள். இவர்களில் அரைவாசிப் பேர் ஏற்கனவே அங்கிருந்து வந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவிற்கான தூதரகம் லைபீரியாவில் இல்லாமையினால் ஐவரிகோட்டுக்கான இந்தியத் தூதுவரே இம்மக்களின் நலன்களை கவனித்து வருவதுடன், அரசபடையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் வலுவடைந்துள்ள இந்தமோதலில இந்திய மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அத்தூதரகம் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இனஒதுக்கலின் உண்மைகளை

# ஜனாதிபதி புஷ் அறியவில்லை; மண்டேலா குற்றச்சாட்டு!

(வாஷிங்டன்)

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்கள் மீது சிறுபான்மை வெள்ளையர்கள் மேற்கொண்டுவரும் இன ஒதுக்கல், மற்றும் அடக்குமுறைநடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நன்கு அறிந்திருக்கவில்லை என்று தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு நெல்சன் மண்டேலா அமெரிக்கா மீது குற்றம் சாட்டியுள்ளார்.

தற்பொழுது பாரியார் திருமதி வின்னி மண்டேலாவுடன் [illegible]ன்னிரெண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமொன்றினை மேற்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் மேற்கொண்டுவரும் வன்முறை நடவடிக்கைகளை கைவிட வேண்டுமென்று திரு. புஷ் கோரிக்கை ஒன்றை விடுத்தார். ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே திரு. நெல்சன் மண்டேலா இந்த குற்றச்சாட்டினை கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஸுக்கு தொடர்ந்து அளித்த பதிலில் தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர்களால் கறுப்பின மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இன ஒதுக்கல் நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் எந்தவொரு செயல் நடவடிக்கையினையோ அல்லது தந்திரோபாயத்தையோ எடுக்கும் உரிமை கறுப்பின மக்களுக்கு இருக்கவேண்டுமென்ற அறை கூவலையும் திரு. நெல்சன் மண்டேலா விடுத்துள்ளார்.

---

## கடத்தல்

உலகில் போதை வஸ்து கடத்தல் பாவனையை தடுப்பதற்கும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று ஐ நா பொதுச் செயலாளர் பெரஸ் டிக்கெய்யார்தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையும்கடத்தலும்இன்று உலகில் அபாயகரமான நிலைக்குச் சென்றுவிட்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## இந்து சமுத்திரப் பிராந்தியத்தில்

# அமைதி உருவாக இந்திய-பாகிஸ்தான் நட்புறவு மாநாடு அவசியம்

(இஸ்லாமாபாத்)

இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர்களை உள்ளடக்கிய மாநாடு அடுத்த மாதம் முதற்பகுதியில் திட்டமிட்டபடி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள இம்மாநாட்டிற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லையெனினும் அது குறித்துகூடிய விரைவில் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படுமென்றும் கூறப்பட்டது.

இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பேச்சுவார்த்தைகளின்மூலம்இருநாடுகளுக்குமிடையிலான எல்லைப் பிரதேசங்களில் தொடர்ந்து நிலவிவரும் பதற்ற நிலைமைகளை தணிப்பதற்கான ஒரு சூழல் ஏற்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை சுமுகமான நிலையில் வைத்திருக்க சிம்லா உடன்படிக்கையை கடைப்பிடிப்பதற்கான வலியுறுத்தல், தீவிரவாதிகளுக்கான உதவிகளை நிறுத்துதல், தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல் ஆகிய யோசனைகளை இம்மாநாடு குறித்து இந்தியா அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் இந்தயோசனைகள் குறித்து கருத்து வேறுபாடு கொண்டிருப்பதாக பாகிஸ்தான் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்த போதும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதி நிலையை தோற்றுவிக்க இந்த நட்புறவு மாநாடு அவசியமென இரு நாடுகளும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# திருமலையிலுள்ள தமிழர்கள் அனைவரும் அகதிகளே

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் உள்ள தமிழர்கள் எல்லோரும் அகதிகளே இவ்வாறு திருக்கோணமலையில் இருந்து யாழ். வந்த அகதி ஒருவர் கூறினார்.

திருக்கோணமலையில் உள்ள தமிழர்கள் எல்லோருமே தாக்குதல்களினால் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் எல்லோருமே அங்கிருந்து வெளியேறுவதற்குத் தான் விரும்புகின்றனர் ஆனால் பெரும்பாலானோர் முன்னதாகவே நகரை விட்டு அகதிகளாக வெளியேறிவிட்டனர்.

ஏனைய சிலர் இராணுவத்தினரும், சிங்களவர்களும் நகரிலே இருப்பதனால் நகரைக்கடந்து வரமுடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு நகரைவிட்டு வெளியேறியுள்ள அகதிகளும் உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர். இவர்களுக்கு உதவி செய்வதற்க எந்த நலன்புரிச் சங்கங்களும் இன்னமும் இவர்களது அகதிமுகாம்களுக்குச் செல்லவில்லை ஏனெனில் அப்பகுதிக்குச் செல்வதற்கு சரியான பாதுகாப்பான பாதைகள் இல்லாது இருப்பதே காரணம் இதனால் உணவோ மருத்துவ வசதியோ கிடைக்காததினால் இவர்களில் பெரும்பாலானோர் பல சிரமங்களின் மத்தியில் தம்மிடமுள்ள பணங்களையெல்லாம் கொடுத்தோ அல்லது தாம் அணிந்துள்ள நகைகளை குறைந்த விலைக்கு விற்றோ காட்டுப் பாதைகளினூடாக யாழ் வந்து சேருகின்றனர்.

# வீதிகளில் அழுகிய நிலையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர் சடலங்கள்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இரு இடங்களில் சுமார் 60 சடலங்கள் உருக்குலைந்த நிலையில் இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினர் விசாரணைக்காக பிடித்துச் சென்றவர்களின் சடலங்களாக இவை இருக்கலாமென அந்தப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கூறினர்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனை வீதிகளிலும் சந்து முனைகளிலும் குறைந்த பட்சம் 35 சடலங்கள் இருந்ததாக அங்குள்ள மக்களை விசாரித்தபோது தெரிய வந்தது.

நகரில் ஏராளமான சடலங்கள் கிடைத்ததை கல்முனையில் உள்ள தங்கள் ஆதராதளர்களும் ஊர்ஜிதம் செய்வதாக இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களும் தெரிவித்தன.

வியாழக்கிழமையில் இருந்து இச் சடலங்கள் கிடப்பதாகக் கல்முனையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கூறினார்.

காகங்களும், நாய்களும் குதறிக் கொண்டிருக்கின்றன. நகரம் முழுவதும் நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது என்றும் அந்த வர்த்தகர் சொன்னார்.

கல்முனையில் இருந்து 5 கிலோ மீற்றர் தெற்கே காரைதீவு என்னும் இடத்தில் சுமார் 30 சடலங்கள் இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இங்கு விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் பிடித்துச் சென்ற 80 பேரில் 50 பேரைத்தான் விடுவித்தனர் என்று கல்முனை மக்கள் தெரிவித்தனர்.

கல்முனையிலோ, காரைதீவிலோ சடலங்கள் கிடப்பதுபற்றி தங்களுக்குத் தகவல் ஏதும் இல்லை என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வங்கி ஊழியர் அழைப்பு

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி பிரதானகிளை ஊழியர்களை இன்று 27 ஆம்திகதி புதன் கிழமை தவறாது இங்கு சமுகமளிக்குமாறு பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## ஆஸ்பத்திரியில் மருந்தில்லை; அதிகாரியும் யாழ்ப்பாணத்தில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட ஆஸ்பத்திரி இயங்காது மூடப்பட்ட நிலையில் உள்ளது. இதேவேளை முல்லைத்தீவு வைத்திய அதிகாரி (எம். ஓ) யாழ்ப்பாணத்தில் நிற்கிறாராம்.

முல்லைத்தீவை அண்டிய கிராமங்களில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உள்ள மருந்துகளை அங்குள்ள மற்ற ஊழியர்களின் உதவியுடன் எடுத்துப் புதுக்குடியிருப்புப் பகுதியில் நோயாளருக்குக் கொடுக்கப்படுகிறது.

அளம்பில் மத்திய மருந்தகமும் பூட்டப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள மக்களும், தேவாலயத்தில் அகதிகளாகத் தங்கியிருப்பவர்களும் கஷ்டப்படுகிறார்கள்.

## பொலிஸ் காயம்

பொத்துவில் கண்ணிவெஸ்யில் சிக்கிய பொலிஸ் கான்டிடபிள் ஒருவர் காயமடைந்ததாக அரசாங்கம்அறிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் மட்டக்களப்பு, திருக்கோணமலை பகுதியில் கடும் மோதல் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## ஹெலி குண்டு வீச்சில் பலர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் நல்லூர், கள்ளியங்காடு ஆகிய பகுதிகளில் ஹெலியில் இருந்து குண்டுகள் வீசப்பட்டது.

இவை குடிமனைகள் மீதுவிழுந்ததனால் சிலவீடுகள் சேதமடைந்ததுடன், பல பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் பேச்சியம்மன் கோயிலடியிலுள்ள 55ஆம் இலக்க வீட்டில் ஒரு ஷெல் விழுந்ததில் இராசதுரை என்பவரும், பண்டாரிக்குளத்திற்கு பின்னால் இரண்டு ஷெல் விழுந்ததில் புஸ்பசாந்தி என்பவரும், கல்வியங்காட்டு சந்தைக்கு அருகாமையில் ஒரு ஷெல் விழுந்ததில் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த வாசன், ராசன், ராஜ் என்பவர்களும் காயமடைந்துள்ளனர்.

மேலும் பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டில் 94 ஆம் இலக்க வீட்டில் ஒரு ஷெல் விழுந்தது ஆனால் எல்லோரும் பங்கருக்குள் இருந்ததனால் காயம் எதுவுமின்றி தப்பினர். ஆனால் வீடு மட்டும் சிறிது பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் பண்டாரிக்குளத்தின் பக்கத்தில் 16ஆம் இலக்க வீட்டில் ஒரு ஷெல் விழுந்தது ஆனால் உயிர்ச்சேதம் எதுவுமில்லை

## மாதகலுக்கு அகதிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை அகதிகள் மாதகல் நோக்கி செல்கின்றனர். பலாலியிலிருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் பொதுமக்களின் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தி வருவதால் மயிலிட்டி, ஊறெழு, கே. கே. எஸ் பகுதி மக்கள் மாதகல் பகுதியிலுள்ள தமது உறவினர் வீடுகளுக்கு அகதிகளாக சென்றனர். (ம)

## அகதிகள் ஆயிரக்கணக்கில் யாழ்ப்பாணம் வருகை

(விசேடநிருபர்)

திருமலையில் இருந்து அகதிகளாகக்கடல் மார்க்கமாகதப்பிவந்தஆயிரக்கணக்கான அகதிகள் முல்லைத்தீவில் தங்கியும் யாழ்ப்பாணத்திற்கு இடம் பேர்ந்தும் வந்துகொண்டிருக்கின்றனர்.

நேற்று செவ்வாய் காலையும் யாழ்ப்பாண வீதிகளில் திருமலை அகதிகள் கால்நடையாகசென்றுகொண்டிருப்பதை காண முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பங்குத்தந்தை வண. ஆர்.ஸ்ரலின் புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை வண. ஜெபரட்ணம் பராமரிப்பில் தங்கியுள்ள அகதிகளின் விபரங்கள் ஈழநாதத்திற்குகிடைத்துள்ளன. அவற்றின் விபரம் வருமாறு :

முல்லைத்தீவு, பழைய பொலிஸ்நிலைய விடுதியில் வேறு பொது, தனியார் உதவிகளுடன் 150 குடும்பங்கள் பராமரிக்கப்படுகின்றன.

அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் 70 குடும்பங்கள் தஞ்சம் புகுந்துள்ளன.

புதுக்குடியிருப்பு புனிதசூசையப்பர் ஆலையத்தில் 40 குடும்பங்களும், மாத்தளன் ஆலயத்தில் 35 குடும்பங்களும், வலையார்மடத்தில் 60 குடும்பங்களும், புதுக்குடியிருப்பு பாடசாயைில் 200 குடும்பங்களும் தஞ்சமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## திருமலை அகதிகள் படகு மூலம் தாளையடிக்கு!

(பளை)

திருக்கோணமலையிலிருந்து பல தமிழ் அகதிகள் படகுகள் மூலம் தாளையடிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுக்கான உணவு, உடை மற்றும் உதவிகளை பளை மகாவித்தியாலய மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பளையில் உள்ள பிரதாபன் சனசமூக நிலையத்திலும் இங்குள்ள ஆலயங்களிலும் பல அகதிகள் தங்கியுள்ளனர்.

குருநகர், வசாவிளான், மயிலிட்டி போன்ற இடங்களில் இருந்தும் பல குடும்பங்கள் வெளியேறி இங்குவந்துள்ளன.

## மாணவர் இயக்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவருக்குமான கூட்டம் இன்று மாலை நான்கு

### மட்டக்களப்பில்

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரில் பொது மக்கள் யாருமே இல்லாமல்நகர் வெறிச்சோடி இருந்ததாகவும், விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் எதுவும் நடத்தாததினாலும் இராணுவத்தினரை நோக்கி எந்த

### வடக்கு-கிழக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு லொறிகள் இப்பொழுது புறப்படுகின்றன என்ற அரசின் வானொலிப் பிரச்சாரத்தைக் கேட்ட மக்கள் தற்போது 'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்று

## செட்டிகுளத்தில் இராணுவம் குவிப்பு

(வவுனியா)

செட்டிகுளம் இராணுவ முகாமுக்கு ஆயிரக்கணக்கான விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே அண்மையில் மோதல் நிலை

### சிறிலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோடு இருவர் மரணமானார்கள்.

திருநெல்வேலியில் இருந்து விமானக் குண்டு வீச்சுக்குப் பயந்து இங்கு வந்து சிறிய தகப்பனார் வீட்டில் தங்கி இருந்த போதே இக் கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

### கொக்காவிலில்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ளப்பட்டது. இதனால் இராணுவம் பொதிகளை விட்டு விட்டு சென்றது.

பின்னர் அப்பகுதியில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளைச்சேர்ந்த இருவர் மரணமடைந்தனர். மரணமடைந்த சங்கர் (கிளிநொச்சி) தாஸ் (மாங்குளம்) ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தங்கள் வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### சமவுரிமை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டுமானால் எழுபத்தைந்து சத வீதமான சிங்கள மக்கள் இருபத்தைந்து சதவீதமான சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாக்கவேண்டும்.

இவ்வாறு ஆர். பிரேமதாஸ நேற்று கண்டியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

நாட்டில் தொண்ணூறு லட்சம் மக்கள் வாக்குரிமையைப் பெற்றுள்ளனர். அதில் ஐந்து லட்சத்திக்கும் குறைவானவர்களே நிர்வாகத் துறையில் பங்கு கொள்கின்றனர். நாட்டில் அமைதியின்மைக்கு இது

முல்லைத்தீவை அண்டிய கிராமங்களில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உள்ள மருந்துகளை அங்குள்ள மற்ற ஊழியர்களின் உதவியுடன் எடுத்துப் புதுக்குடியிருப்புப் பகுதியில் நோயாளருக்குக் கொடுக்கப்படுகிறது.

## மாணவர் இயக்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவருக்குமான கூட்டம் இன்று மாலை நான்கு மணிக்கு பரமேஸ்வரா சந்தியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இவ் மாணவர் இயக்க உறுப்பினர்கள் சகலரும் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளனர்.

### இராணுவத்திற்கு

)1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் ஜெனரல்சிறில் ரணதுங்கா தெரிவித்ததாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

மக்களை குண்டுவீசிக் கொல்லும் நோக்கம் இராணுவத்துக்கு இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்ததாகவும் அச்செய்தி தெரிவித்தது.

### தம்பலகாமத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணிமீதுவிடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலினால் மூன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அதேவேளை நேற்றுமுன்தினம் மத்தியானம் பன்னிரண்டு மணியளவில் ஹெலிகப்டர் சுட்டதில் நான்குபேர் காயமடைந்தனர்.

### புலிகள் தாக்கி

அளிக்கவோ, ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லவோ முடியாதுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது.

அதேவேளை கோட்டை முகாமைச் சுற்றியுள்ள போராளிகளின் நிலையங்கள் பல அழிக்கப்பட்டதால் தாக்குதல் வலுவிழந்து வருவதாகவும், இதனால் யாழ். கோட்டையைச் சுற்றி பதற்றத்துடன் அமைதி நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### புலிகளுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஒப்பந்தம் தக்க தருணத்தில் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் தற்போதைய நிலைமையை அங்கு தவிர்த்திருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திருமலை அகதிகள் படகு மூலம் தாளையடிக்கு!

(பளை)

•திருக்கோணமலையிலிருந்து பல தமிழ் அகதிகள் படகுகள் மூலம் தாளையடிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுக்கான உணவு, உடை மற்றும் உதவிகளை பளை மகாவித்தியாலய மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பளையில் உள்ள பிரதாபன் சனசமூக நிலையத்திலும் இங்குள்ள ஆலயங்களிலும் பல அகதிகள் தங்கியுள்ளனர்.

குருநகர், வசாவிளான், மயிலிட்டி போன்ற இடங்களில் இருந்தும் பல குடும்பங்கள் வெளியேறி இங்குவந்துள்ளன.

### மட்டக்களப்பில்

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரில் பொது மக்கள் யாருமே இல்லாமல்நகர் வெறிச்சோடி இருந்ததாகவும், விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் எதுவும் நடத்தாததினாலும் இராணுவத்தினரை நோக்கி எந்த வித துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படவில்லை என்றும் அங்கிருந்து வந்த அகதிகள் தெரிவித்தனர்,

நகரினுள் பிரவேசித்த இராணுவத்தினர் கண்ணிவெடிகளைஅகற்றும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறினார்கள். (ம)

### அகதிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இவர்களது படகினையும் தமது படகுடன்கட்டி இழுத்துக்கொண்டு தமது முகாமிற்கு சென்றனர்.

பின்னர் தமது முகாமில் வைத்து இவ் அகதிகளை அடித்து கொடூரமான முறையில் சித்திரவதையும் செய்துள்ளனர். இளம் பெண்களின் முகங்களில் சிகரட்டினால் சூடுபோட்டுள்ளார்கள் பின்னர் ஆறு இளைஞர்களை மறித்து வைத்துக்கொண்டு, ஏனையோரை அடித்துத் துரத்தியுள்ளனர்.

இவ்வாறு அழைத்து செல்லப்பட்டவர்களில் மூன்று முஸ்லிம் இளைஞர்களும் அடங்கி இருந்ததாகவும் அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகளிலிருந்து தெரியவருகிறது. இந்த இளைஞர்கள் பற்றிய மேலதிக விபரம் எதுவும் இன்னமும் தெரியவரவில்லை என்றும் அச் செய்திகளில் இருந்து தெரியவருகிறது.

அடித்து துரத்தப்பட்டவர்களில் காயமடைந்த எட்டுப்பேருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தினர் சிகிச்சை அளித்துள்ளனர்.

### ரோந்து

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள் இரண்டு ஆகியன.

இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு புலிகளுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டதாக வவுனியாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

### வடக்கு-கிழக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு லொறிகள் இப்பொழுது புறப்படுகின்றன என்ற அரசின் வானொலிப் பிரச்சாரத்தைக் கேட்ட மக்கள் தற்போது 'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்று கூறி வேதனைப் படுகின்றார்கள்.

அவசர அலுவல்களுக்காக கொழும்பு சென்று யாழ்ப்பாணம் திரும்ப முடியாமல் தவிக்கும் பதினைந்தாயிரம் தமிழ் மக்களை விஷேச வாகனங்களில் 24 மணித்தியாலயத்துக்குள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்போவதாக அரசு அறிவித்தது. ஆனால்72மணித்தியாலங்கள் கடந்துவிட்டன.

தனியார் வாகனங்களில் ஏற்றி வரப்படும் பொருள்களையும் அனுராதபுரம், வவுனியா, புத்தளம் பகுதிகளில் வைத்து சிங்கள இராணுவத்தினர் வழிப்பறி செய்து விடுகின்றனர்.

### செய்திகளுக்கு பதில் இல்லை

யாழ். அரசாங்க அதிபரும், யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரும், வன்னி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினரும் ஸ்ரீ லங்கா அரசுக்கும் கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அனுப்பிவைத்துள்ள வானொலிச் செய்திகளுக்கு உருப்படியான பதில் எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை.

இராணுவ முகாமுக்குச் சுற்றிலும் நிலைகொண்டுள்ள விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆயுதப்படையினர் கோட்டையிலிருந்து 750 மீற்றருக்கு அப்பாலுள்ள கடைக் கட்டிடங்கள், வீடுகள் அனைத்தின் மீதும் சக்தி வாய்ந்த குண்டுகளை வீசி யாழ் நகரையே நாசம் செய்துள்ளனர்.

### யாழ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நிலமை சரிவராததினால் இக்கப்பல் கொழும்பிற்குத் திரும்பிச் சென்றுவிட்டது. இதனால் யாழ் மாவட்டத்தில் மா பாண் என்பன மிகவும் தட்டுப்பாடாக இருக்கின்றது. இதனால் மூன்று மாதத்திற்குத் தேவையான மாவை கொழும்பில் இருந்து மீண்டும் தரை வழியாக அனுப்பி வைக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் கேட்டுள்ளார். (ம)

இலக்க ... ஒரு ஷெல் விழுந்ததில் இராசதுரை என்பவரும், பண்டாரிக்குளத்திற்கு பின்னால் இரண்டு ஷெல் விழுந்ததில் புஸ்பசாந்தி என்பவரும், கல்வியங்காட்டு சந்தைக்கு அருகாமையில் ஒரு ஷெல் விழுந்ததில் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த வாசன், ராசன், ராஜ் என்பவர்களும் காயமடைந்துள்ளனர்.

மேலும் பருத்தித்துறைவீதி

### அகதிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை அகதிகள் மாதகல் நோக்கி செல்கின்றனர். பலாலியிலிருந்து ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் பொதுமக்களின் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தி வருவதால் மயிலிட்டி, ஊரெழு, கே. கே. எஸ் பகுதி மக்கள் மாதகல் பகுதியிலுள்ள தமது உறவினர் வீடுகளுக்கு அகதிகளாக சென்றனர். (ம)

## செட்டிகுளத்தில் இராணுவம் குவிப்பு

(வவுனியா)

செட்டிகுளம் இராணுவ முகாமுக்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வந்து சேர்ந்தனர்.

மதவாச்சியிலிருந்து தரை மார்க்கமாக திங்கட்கிழமை வந்து சேர்ந்த இராணுவத்தினர், செட்டிகுளம் பகுயிதில் தேடுதல் வேட்டை மேற்கொள்ள முயற்சியெடுக்கலாம் அல்லது அங்கிருந்து மன்னார் செல்லலாம்என்று எதிர்பார்க்கப் படுகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே அண்மையில் மோதல் நிலை உருவாக்குவதற்கு முன்னர், செட்டிகுளம் இராணுவ முகாமில் சுமார்50 இராணுவத்தினரே தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

திடீரென்று இடம் பெற்ற இராணுவ குவிப்பின் மூலம் செட்டிகுளம் பகுதி மக்களிடையே அச்ச நிலை ஏற்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. (தி)

## மன்னாரில் இருந்து இந்தியாவிற்கு அகதிகள்

(இராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் பகுதிக்கு வரும் தமிழ் அகதிகளின் தொகை தினமும் அதிகரித்து வருகிறது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ குடும்பங்களே பெருமளவு இங்கு படகுகளில் வருகின்றன.

மன்னார்தீவு இராணுவத்தால் தாக்கப்படும் என்ற அச்சத்தால் இவர்கள் வருகின்றனர்.

1984ஆம் 1985ஆம் ஆண்டுகளிலும்இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அவர்கள் இங்கு படகுகளில் வந்தனர்.

தாம் வளர்த்த பிராணிகளையும் இவர்கள் படகுகளில் கொண்டுவந்தனர்.

இனிமேல் இலங்கையில் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர்வந்த அகதிகள் சில போராளிகளின் ஆதரவாளர்கள். ஆனால் தற்போது வருபவர்கள் அப்பாவி மக்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பெற்றோல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுகரைக்கு வரமுடிகிறது. கொடுக்க முடியாதவர் அந்தக்கரையிலே நிற்க வேண்டி உள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதியில் இருந்து யாழ். வரும் அகதிகள் பலர் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வான் வாடகைக்குப் பிடித்து வருகின்றனர். இவர்கள் பூநகரி வரையே வரமுடிகிறது. பூநகரியில் இருந்து கேரதீவிற்கு வருவதற்கு இவர்களிடம் பெற்றோல் இல்லாததினால் இவ் அகதிகள் யாழ்ப்பாணம் வரமுடியாமல் பூநகரியிலேயே தங்க வேண்டியுள்ளது. இதனால் பூனகரியில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (ம)

### அசாத்திய அமைதி

யாழ்நகரப் பகுதியில் நேற்று பகல் அசாத்திய அமைதி நிலவியது.

எனினும் யாழ்நகரம் சுடுகாடாக காட்சி தந்தது. யாழ்நகரை அண்மித்த குருநகரமும் வழமையான ஆரவாரம் இல்லாமல் ஓய்ந்திருந்தது.

குருநகரில் இருந்து இடம் பெயர்ந்த மேலும் ஐம்பதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும், கொட்டடி, நாவாந்துறை, கண்ணாபுரம், பொம்மைவெளியில் இருந்து வெளியேறியோர் ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலையிலும் தஞ்சமடைந்துள்ளனர் (21)

துள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

முல்லைத்தீவு, பழைய பொலிஸ்நிலைய விடுதியில் வேறு பொது, தனியார் உதவிகளுடன் 150 குடும்பங்கள் பராமரிக்கப்படுகின்றன.

அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் 70 குடும்பங்கள் தஞ்சம் புகுந்துள்ளன.

புதுக்குடியிருப்பு புனிதசூசையப்பர் ஆலையத்தில் 40 குடும்

### சிறிலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோடு இருவர் மரணமானார்கள்.

திருநெல்வேலியில் இருந்து விமானக் குண்டு வீச்சுக்குப் பயந்து இங்கு வந்து சிறிய தகப்பனார் வீட்டில் தங்கி இருந்த போதே இக் கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

இச் சம்பவத்தில் கோமர் (32) வசந்தன் (07) ஆகியோர் மரணமானார்கள்.

நேற்றிரவு குடிமக்கள்மீது தாங்கள் குண்டுவீசி தாக்குதல்கள் மேற்கொள்ளவில்லைஎன ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

இச்சம்பவத்தில் வசந்தராணி (21), செல்வராஜ் (23), தீபன் (09), ஆவிதா (07), திலீப் (4) ஆகியோர் காயமடைந்தனர். இதில் செல்வராஜ், தீபன் ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

### யார்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் கூறியுள்ளார். இந்திய உளவு நிறுவனமான 'றோ' வால் இந்தியாவுக்கு எந்தவிதமான பயனுமில்லை என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா கூறியது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் சிங் இப்படிக் கூறினார்.

ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தங்கள் வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### சமவுரிமை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டுமானால் எழுபத்தைந்து சத வீதமான சிங்கள மக்கள் இருபத்தைந்து சதவீதமான சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாக்கவேண்டும்.

இவ்வாறு ஆர். பிரேமதாஸ நேற்று கண்டியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

நாட்டில் தொண்ணூறு லட்சம் மக்கள் வாக்குரிமையைப் பெற்றுள்ளனர். அதில் ஐந்து லட்சத்திக்கும் குறைவானவர்களே நிர்வாகத் துறையில் பங்கு கொள்கின்றனர். நாட்டில் அமைதியின்மைக்கு இதுவும் ஒருகாரணம் இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

### குடிநீர் பிரச்சினை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தண்ணீர், மருந்து வகைகள், உணவு ஆகியவற்றை எடுத்துச் சென்று வழங்குவதற்கு எரிபொருள் தட்டுப்பாடு பெரும் தடையாகவுள்ளது.

### ஆஸ்பத்திரிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை 100 முதல் 500 கட்டில்களைக் கொண்டவைகளான ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி, கிளிநொச்சி ஆஸ்பத்திரி, வவுனியா ஆதார வைத்தியசாலை. முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையும் மூடப்பட்டுள்ளன.

தருமபுரம் மத்திய மருத்தகமும்பிரசவவிடுதியும்செயற்படாமல் உள்ளன.


## காணவில்லை

அன்பாக வளர்க்கப்பட்ட நாய் (நிறம் வெள்ளை கழுத்தில் பட்டி) அத்தியடிப் பகுதியில் காணாமல் போய்விட்டது இந்நாய் திரு. அன்ரன் பாலசிங்கத்துக்குச் சொந்தமானது. நாயைக் கண்டவர்கள் ஈழநாதம் காரியாலயத்துக்குத் தெரிவிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



## சமாதி எய்தினார்
## தவத்திரு வடிவேல் சுவாமிகள்

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம பிரதமகுரு தவத்திரு வடிவேல் சுவாமிகள் நேற்று அதிகாலை சமாதி எய்தினார். அன்னாரின் சமாதி பூசைகள் இன்று மாலை 3 மணிக்கு மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெற்று அங்கு சமாதி வைக்கப்படும்.

தகவல்:-
கணேசானந்தா மகாதேவ சுவாமிகள்
(B-382)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.